**ஆண் :** காத்திருந்து காத்திருந்து
காலங்கள் போகுதடி
பூத்திருந்து பூத்திருந்து
பூவிழி நோகுதடி
நேத்துவரை சேர்த்துவச்ச
ஆசைகள் வேகுதடி
நீ இருந்து நான் அணைச்சா
நிம்மதி ஆகுமடி

**ஆண் :** காத்திருந்து காத்திருந்து
காலங்கள் போகுதடி
பூத்திருந்து பூத்திருந்து
பூவிழி நோகுதடி

**பெண் :** ஆஆ…ஆரிரோ..ஆரிரோ..
தங்க சலங்க கொண்டு
தாய்மாமன் வருவாரு
பொண்ணு மணியும் கொண்டு
பொன்கூட தருவாரு
பொழுதோட தூங்கு கண்ணே
ஆரி ஆரிரோ
விடிஞ்சாக்கா முழிச்சுகலாம்
ஆரி ஆரிரோ

**ஆண் :** ஆஆ…ஹா….ஆஆ…ஹா..ஆஆ…
முக்குளிச்சு நானெடுத்த
முத்துச்சிப்பி நீதானே
முத்தெடுத்து நெஞ்சுக்குள்ள
பத்திரமா வெச்சேனே

**ஆண் :** வெச்சதிப்போ காணாம
நானே தேடுறேன்
ராத்திரியில் தூங்காம
ராகம் பாடுறேன்

**ஆண் :** நான் படிக்கும் மோகனமே
நான் படைச்ச சீதனமே
தேன் வடிச்ச பாத்திரமே
தென்மதுர பூச்சரமே
கண்டது என்னாச்சு…
கண்ணீரில் நின்னாச்சு

**ஆண் :** காத்திருந்து காத்திருந்து
காலங்கள் போகுதடி
பூத்திருந்து பூத்திருந்து
பூவிழி நோகுதடி

**ஆண் :** நீரு நிலம் நாலு பக்கம்
நான் திரும்பி பாத்தாலும்
அந்தப்பக்கம் இந்தப்பக்கம்
அத்தனையும் நீயாகும்

**ஆண் :** நெஞ்சுக்குள்ள நீங்காம
நீதான் வாழுற
நாடியிலே சூடேத்தி
நீதான் வாட்டுற

**ஆண் :** ஆலையிட்ட செங்கரும்பா
ஆட்டுகிற எம் மனச
யாரவிட்டு தூதுசொல்லி
நான் அறிவேன் உம் மனச
உள்ளமும் புண்ணாச்சு…
காரணம் பெண்ணாச்சு

**ஆண் :** காத்திருந்து காத்திருந்து
காலங்கள் போகுதடி
பூத்திருந்து பூத்திருந்து
பூவிழி நோகுதடி
நேத்துவரை சேர்த்துவச்ச
ஆசைகள் வேகுதடி
நீ இருந்து நான் அணைச்சா
நிம்மதி ஆகுமடி

–

**ஆண் :** காத்திருந்து காத்திருந்து
காலங்கள் போகுதடி
பூத்திருந்து பூத்திருந்து
பூவிழி நோகுதடி